முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.293/2018

தேதி : 12–03–2026

(வா.சா.1) – திரு.கனகதுரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. என் தந்தை என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கிரையம் செய்வதற்காக கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு, அதை செய்து தராததால் இவ்வழக்கை தாக்்ல செய்துள்ளேன். என் அப்பா என்ன வேலை பார்க்கிறார் என்றால் விவசாயம். வேறு தொழில் செய்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், என் தகப்பனார் வட்டிக்கு கடன் கொடுத்து வந்தார் என்றும், மேலும் மாத தவணை சீட்டு பிடித்து வந்தார் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் வழக்கு சொத்தில் எந்தவித வில்லங்கமும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் அவர் பெயரில் தான் பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான். அப்படி இருக்கும்போது 1வருட காலக்கெடு போடப்பட்டது என்றால் தோப்பை 1 வருடத்திற்கு குத்தகைக்கு கொடுத்திருந்ததால் அது முடிந்தபின்னர் எழுதி தருவதாக சொல்லியிருந்தார். கிரைய ஒப்பந்தத்தில் தென்னை தோப்பு இருந்ததாகவோ, அதை குத்தகைக்கு விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அப்பா விவசாயம் செய்து வந்ததால் கையிருப்பாக ரூ.2 முதல் 3 லட்சம் வைத்திருப்பார் என்றால் சரிதான்.

2. உண்மையில் பிரதிவாதி என் தந்தையிடம் கடன் வாங்கியிருந்தார் என்றும், பொறுப்பிற்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் கிரையம் வா ங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் சொத்தில் வில்லங்கம் இல்லாதநிலையில் அன்றைய தினமே கிரைய பத்திரம் எழுதி இருப்பார்கள் என்றும், 1 வருட காலக்கெடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால்சரியல்ல. மீத கிரையத்தொகை ரூ. 50 ஆயிரம் என்றால் சரியல்ல. கடனிற்காக கொடுத்ததால் தான்

என் தந்தையிடம் போதிய பணம் இருந்திருந்தும் மீத கிரைய த்தொகையை 1 வருடத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று கால நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா வட்டிக்கு கொடுக்கும் தெ ாழில் செய்து வந்தார் என்றும், பிரதிவாதி என் அப்பாவிடம் 4 லட்சம் கடன் கேட்டியிருந்தார் என்றும், அதற்கு கிரைய ஒப்பந்தம் பொறுப்பிற்காக எழுதி கொடுத்தால் தான் மேற்படி தொகை தருவேன் என்று என் தந்தை சொன்னதால் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தால் என்றால் சரியல்ல, என் அப்பா வட்டிக்கு கொடுக்கவில்லை. பிரதிவாதிக்கும் என் அப்பாவிற்கும் கிரைய ஒப்பந்ததிற்கு முன்பு வரவு செலவு இருந்தது பற்றி தெரியுமா என்றால் என் அப்பாவிற்கும் பிரதிவாதிக்கும் வரவு செலவு இருந்ததில்லை.

3. நான் சொல்வது தவறு என்றும், பிரதிவாதிக்கும் என் அப்பாவிற்கும் வரவு செலவு இருந்தது என்றும், தற்போது வழக்கிற்காக உண்மைக்கு மாறாக வரவு செலவு இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதினம் ஒப்படைக்கவில்லை என்று ஒப்பந்தத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் கிரைய செய்ய வேண்டும் என்று கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தால் கிரைய தொகையில் 90 சதவீதம் கொடுத்திருந்த நிலையில் சுவாதினம் ஒப்படைக்க பட்டியிருக்கும் என்றும், கடனிற்காக போடப்பட்ட தால் தான் சுவாதினம் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரியல்ல. சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் தாமரைகுளம் வடத்திக்கிராமம் என்ற இடத்தில் உள்ளது. நாங்கள் இருப்பது மரிச்சிலம்பு கிராமம் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள கிராமத்தில் எங்களுக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். நாங்கள் வசிக்கும் இடத்திற்கும் தாவா சொத்து உள்ள இடத்திற்கும் சுமார் 25 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். வரவு செலவிற்காக மட்டும் தான் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து நஞ்சை நிலம் என்றால் சரிதான். அதில் 300, 400 தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போட்ட காலத்தில் சொத்தின் மதிப்பு என்ன என்றால் 4, 5 லட்சம் என்றும், தற்போது 30 லட்சம். கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட காலத்திலேயே அதன் மதிப்பு 30 லட்சம் தான் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்திட்டவர்கள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி கையெழுத்திட்ட ரவிச்சந்திரனும் என் அப்பாவும் பைனான்ஸில் பங்குதாரர்கள்

என்றால் சரியல்ல, என் அப்பா பைனான்ஸ் செய்யவில்லை. அதே தேதியில் ரவிச்சந்திரனிடம் பிரதி வாதி ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றும், அதில் என் அப்பா சாட்சி கையெழுத்திட்டுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது.

4. என் தகப்பனாரிடம் பிரதிவாதி பெற்ற 4 லட்சத்திற்காக தான் கிரைய ஒப்பந்தம் பொறுப்பிற்காக எழுதப்பட்டது என்றும், எனவே நான் கோரியுள்ள ஏற்றுகை ஆற்றுகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், பிரதிவாதி என் அப்பாவிடம் பெற்ற 4 லட்சத்தை திருப்பி கொடுக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. கடனிற்காக எழுதப்பட்டுள்ளதால் தான் 1 வருட காலக்கெடு முடிவதற்கு 1 நாள் முன்பு தான் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் அதை பற்றி தெரியாது. பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனவே நான் தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்./-K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.